| | |
|---|---|
| 8th Std GENERAL TAMIL Questions | – 100 Questions |
| Total Marks (1x1.5) | – 150 Marks |
| Time Duration | – 1 ½ Hours |

1. அசலாம்பிகை அம்மையாரின் காந்தி புராணம் எத்தனை பாடல்களைக்கொண்டது
[A] ஈராயிரத்து முப்பத்து நான்கு
[B] ஓராயிரத்து முப்பது
[C] ஈராயிரத்து முப்பது
[D] ஓராயிரத்து முப்பத்து நான்கு

2. பின்வருவனவற்றுள் எவற்றை பிரபந்தம் என்று வடநூலார் கூறுவர்
[A] சிற்றிலக்கியம் [B] பேரிலக்கியம்
[C] இதிகாசங்கள் [D] புராணங்கள்

3. தொண்ணூற்றாறு - பிரிக்கும் முறை
[A] தொண்ணூற்று + ஆறு
[B] தொண்மை + ஆறு
[C] தொள்ளாயிரம் + ஆறு
[D] தொண்ணூறு + ஆறு

4. "இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடகத்துறைக்கு பெருந்தொண்டு புரிந்தவர் யார்?
[A] பம்மல் சம்பந்தனார்
[B] ஔவை டி.கே. சண்முகனார்
[C] சங்கரதாசு சுவாமிகள்
[D] பரிதிமாற் கலைஞர்

5. கீழ்க்கண்ட யார் அவையில் ஒட்டக்கூத்தர் செல்வாக்கோடு திகழவில்லை
[A] சோழன் இராசேந்திரன்
[B] இரண்டாம் குலோத்துங்கன்
[C] விக்கிரம சோழன்
[D] இரண்டாம் இராசராசன்

6. "கூன்சங்கின் பிள்ளை கொடிப்பவளக் கோடிடறித் தேன்கழியில் விழத் திரைக்கரத்தால்-
வான்கடல்வந் (து)"
என்ற நளவெண்பா பாடலில் குறிப்பிடப்படும் தேன் கழியின் பூக்கள்
[A] குறிஞ்சி பூக்கள் [B] முல்லை பூக்கள்
[C] மருதம் பூக்கள் [D] நெய்தல் பூக்கள்

7. புலவர்கள், பொருளழகும், சொல்லழகும் தோன்றக் கவிதைகளை இயற்றிக் கற்போரை மனங்குளிரச் செய்வார்கள். இதனை விளக்கும் இலக்கணம்
[A] அணியிலக்கணம் [B] பொருளிலக்கணம்
[C] சொல்லிணக்கணம் [D] யாப்பிலக்கணம்

8. எந்த நான்கு காரணங்களால் நகைச்சுவை தோன்றும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது?
[A] இளமை, புதுமை, துள்ளல், புரியாமை
[B] சொல்லல், எள்ளல், மடமை, வளமை
[C] இளமை, எள்ளல், மடமை, அறியாமை
[D] இளமை, வளமை, புதுமை, அறியாமை

9. ஆமை வடைக்காய் அரை ஞாண் பணயம் போளிக் காகப் புத்தகப் பணயம்- இப்பாடலடிகள் இடம் பெறுவது
[A] அழகின் சிரிப்பு [B] விழுதும் வேரும்
[C] மருமக்கள் வழி மான்மியம்
[D] கம்ப ராமாயணம்

10. பதினேழாம் நூற்றாண்டில் பிற்பகுதியில் .............. நாடகங்கள் தோன்றின?
[A] காவியக் கூத்து [B] நொண்டி
[C] தோல்பாவை [D] வீதி

11. காலங்காட்டும் இடைநிலையும் பெயரெசச்ச விகுதியும் மறைந்து வரும் பெயரெச்சம் ........................ எனப்படும்
[A] பண்புத் தொகை [B] உம்மைத் தொகை
[C] வினைத் தொகை [D] அன்மொழித்தொகை

12. கீழ்க்கண்டவற்றில் எது பழந்தமிழரின் இலக்கண நூல் ஆகும்?
[A] நன்னூல் [B] தொன்னூல் விளக்கம்
[C] தொல்காப்பியம்
[D] புறப்பொருள் வெண்பாமாலை

13. 1985 ஆம் ஆண்டு யாருடைய செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலியின் முதல் தொகுதி வெளிவந்தது?
[A] கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி
[B] தேவநேயப்பாவாணர்
[C] அகத்தியலிங்கம்
[D] வேங்கிடசாமி நாட்டார்

14. பொருத்துக

| | சொற்கள் | | இலக்கணகுறிப்பு |
|---|---|---|---|
| a) | கருங்கண் | 1. | வினைத்தொகை |
| b) | புத்தகம் படித்தான் | 2. | உம்மைத்தொகை |
| c) | வெற்றிலைப் பாக்கு | 3. | வேற்றுமைத் தொகை |
| d) | வளர்புகழ் | 4. | பண்புத்தொகை |
| e) | பொற்றொடி வந்தாள் | 5 | அன்மொழித் தொகை |

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| [A] | 3 | 2 | 4 | 1 | 5 |
| [B] | 3 | 4 | 2 | 1 | 5 |
| [C] | 4 | 3 | 2 | 5 | 1 |
| [D] | 4 | 3 | 2 | 1 | 5 |

15. தனிக்குறிலைச் சாராது சொல்லின் இறுதியில் வல்லினம் ஊர்ந்து வரும் உகரங்களே ...... ஆகும்
[A] முற்றியலுகரம்
[B] மென்தொடர்க் குற்றியலுகரம்
[C] வன்தொடர்க் குற்றியலுகரம்
[D] குற்றியலுகரம்

16. கருவி, கருத்தா ஆகிய பொருள்களில் ............ உருபு வரும்
[A] அது, ஒரு [B] ஆல், கண்
[C] ஆல், ஆன் [D] பெயர், விளி

17. இந்தியன் சஞ்சிகை என்னும் ஏடுகளில் போப் அவர்கள் எழுதிய கட்டுரைகள்
[A] தென்னிந்திய கிறிஸ்துவ சபைகளின் வளர்ச்சி
[B] சமயபணிகள் பற்றிய கட்டுரைகள்
[C] தமிழ்மொழி ஆராய்ச்சி பற்றிய கட்டுரைகள்
[D] தமிழக மக்களின் பழக்கவழக்கங்கள் பற்றிய கட்டுரைகள்

18. நூல்கள் கனித் தமிழில் அள்ளிட வேண்டும் - அதைநோக்கி தமிழ் பணியும் ஆற்றிட வேண்டும் - எனும் பாடலின் ஆசிரியர்?
[A] பாரதிதாசன் [B] புகழேந்திப்புலவர்
[C] சச்சிதானந்தன் [D] பாரதியார்

19. தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட ... ... இப்பாடலில் அணுமுறை உள்ளது?
[A] கணிதவியல் [B] வானியல்
[C] தத்துவவியல் [D] அறிவியல்

20. திண்தோள் வயவேந்தர் செந்தாமரைமுகம் போய் வெண்தா மரையாய் - இதில் பயின்று வந்துள்ள இலக்கணம் தேர்க.
[A] வினைத்தொகை [B] பண்புத்தொகை
[C] உவமைத்தொகை [D] உம்மைத்தொகை

21. சேந்தன் திவாகரத்தை தொடர்ந்து எத்தனை தமிழ் நிகண்டுகள் தோன்றியுள்ளதாக கருதப்படுகிறது
[A] பதினைந்து நிகண்டுகள்
[B] இருபத்தைந்து நிகண்டுகள்
[C] நாற்பத்தைந்து நிகண்டுகள்
[D] ஐம்பதுக்கும் மேற்பட்ட நிகண்டுகள்

22. க.சச்சிதானந்தன் இயற்றிய ஆனந்தத் தேன் நூல் என்பது கீழ்கண்ட எதன் வகைக்குள் அடங்கும்
[A] நாவல் வகையில் [B] கவிதை வகையில்
[C] சிறுகதை வகையில் [D] கட்டுரை வகையில்

23. "அகரமுதலி ஒன்றை நாளும் படித்து வருவாய் நிகரில்லாத சொற்கள் நினைவில் நன்கு பெறுவாய்"-என்று விளம்பியவர்
[A] பாரதியார்
[B] கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை
[C] பாரதிதாசன்
[D] வெ.இராமலிங்கனார்

24. கீழ்க்கண்டவற்றுள் காற்று, நிலவு, ஞாயிறு என்பவை
[A] வினை இயற்சொற்கள்
[B] பெயர்த் திரிசொற்கள்
[C] வினை திரிசொற்கள்
[D] பெயர் இயற்சொற்கள்

25. ஒரு கட்டத்திற்குள் இருக்கும் கணிணிகளை ஈதர்நெட்அட்டை என்னும் சிறுபலகையைப் பயன்படுத்தி இணைக்கும் இணைப்பு
[A] மென்பரப்பு வலைப்பின்னல்
[B] குறும்பரப்பு வலைப்பின்னல்
[C] பரவலாவிய வலைப்பின்னல்
[D] நீண்ட வலைப்பின்னல்

26. நீலன் சிலை அகற்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்
[A] அசலாம்பிகை அம்மையார்
[B] அம்புஜத்தம்மாள்
[C] மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்
[D] அஞ்சலையம்மாள்

Note : The Information Provided here is only for Reference.It may vary the Original.

27. "மானம் பெரிதென உயிர்விடுவான்; மற்றவர்க்காகத் துயரப்படுவான்; தானம் வாங்கிடக் கூசிடுவான்; தருவது மேல் எனப் பேசிடுவான்"- என தமிழனனின் பெருமையை உணர்த்தியவர்
[A] கவிமணி தேசிய விநாயகம்
[B] பாவேந்தர் பாரதிதாசன்
[C] விடுதலைக்கவி பாரதியார்
[D] நாமக்கல் கவிஞர்

28. "காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நீதான்! இந்தப் பாரிடைத்துயில்வோர் கண்ணிற் பாய்ந்திடும் எழுச்சி நீ தான்"-என பாரதிதாசன் எதனைக் குறிப்பிடுகிறார்
[A] கதிரவன் [B] இதழ்கள்
[C] பெண்கள் [D] கவிதைகள்

29. "முற்றுஈரெச்சம் எழுவாய் விளிப்பொருள் ஆறுருபு இடையுரி அடுக்கிவை தொகாநிலை"- இப்பாடல் இடம் பெற்ற நூல்
[A] நன்னூல் [B] தொல்காப்பியம்
[C] புறப்பொருள் வெண்பாமாலை
[D] தண்டியலங்காரம்

30. பலாச்சுளை, படக்காட்சி, பொற்சிலை போன்றவைகள் ..................புணர்ச்சிக்கு எடுத்துக்காட்டுகளாகும்
[A] விகாரப் புணர்ச்சி [B] இயல்பு புணர்ச்சி
[C] பண்புப்பெயர்ப் புணர்ச்சி
[D] குற்றியலுகரப் புணர்ச்சி

31. எந்த இணையதளம் தமிழ் எழுத்துக்களை எழுதவும் ஒலிக்கவும் கற்றுத் தருகிறது
[A] தமிழ்ஈழம் [B] தமிழம்
[C] மொழியம் [D] மணியம்

32. "நந்தனார் சரித்திரம்" என்ற நூலின் ஆசிரியர் யார்?
[A] மறைமலையடிகள்
[B] ஔவை டி.கே.சண்முனார்
[C] சங்கரதாக சுவாமிகள்
[D] கோபால கிருட்டிணப் பாரதியார்

33. "பிள்ளைக் குருகிஇரங்கப் பேதைப்புள் தாலாட்டும் வள்ளைக் குருநாடர் மன்"- என்ற நளவெண்பா பாடலில் 'பிள்ளைக் குருகு' என்பது
[A] அணிற்பிள்ளை [B] கீரிப்பிள்ளை
[C] நாரைக்குஞ்சு [D] குரங்குக்குட்டி

34. கூற்றுகளை கவனி
1. "வான்பெற்ற நதிகழ்தாள் வணங்கப்பெற்றேன்" - இவ்வடிகளில் வான் பெற்ற நதி - காவிரியாறு
2. களபம் என்ற சொல்லின் பொருள் சந்தனம்
3. வில்லிபுத்தூரார் - 15ம் நூற்றாண்டு
4. வில்லிபாரதம் 10 பருவம் கொண்டது
5. வில்லிபாரதம் 4350 விருத்தப்பாடலால் ஆனது.
[A] 1, 2, மற்றும் 3 சரி
[B] 2, 3, மற்றும் 4 சரி
[C] 2, 4 மற்றும் 5 சரி
[D] 1, 3 மற்றும் 4 சரி

35. உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும் உயிரை மேவிய உடல் மறந்தால் - இப்பாடலை அருளியவர் யார்?
[A] தாயுமானவர்
[B] இராமலிங்க வள்ளலார்
[C] திரு.வி கல்யாண சுந்தரம்
[D] அருணகிரிநாதர்

36. ஞாயிறைச் சுற்றியுள்ள பாதையை "ஞாயிறு வட்டம்" எனக் கூறும் நூல் எது?
[A] சிலப்பதிகாரம் [B] தொல்காப்பியம்
[C] புறநானூறு [D] திருக்குறள்

37. கீழக்கண்ட எதனை "சங்க அகராதி" எனவும் அழைப்பர்
[A] திவாகரர் எழுதிய சேந்தன் திவாகரம்
[B] மண்டலபுருடர் இயற்றிய சூடாமணி நிகண்டு
[C] வீரமாமுனிவரின் சதுரகராதி
[D] யாழ்பாணம் கதிரைவேலனரின் தமிழ்ச்சொல் அகராதி

38. 'ஓதிய உடம்பு தொறும் உயிரென உலாயதன்றே' என்று கூறியவர் யார்?
[A] திருமூலர் [B] கம்பர்
[C] கவிமணி [D] பாரதிதாசன்

39. பவானந்தர் என்பார் எந்த ஆண்டு "தற்காலத் தமிழ்ச்சொல் அகராதியும்" மற்றும் "மதுரைத் தமிழ்ப் பேரகராதியும்" வெளியிட்டார்
[A] முறையே 1920 மற்றும் 1927
[B] முறையே 1925 மற்றும் 1935
[C] முறையே 1925 மற்றும் 1937
[D] முறையே 1920 மற்றும் 1937

Note : The Information Provided here is only for Reference.It may vary the Original.

www.sarkariresults.io

40. "தேம்பாவணி, காவலூர் கலம்பகம் ............ காட்சி அளிக்கிறது. தொன்னூல் ............ இலங்குகின்றது. சதுரகராதி ............ மிளிர்கிறது. வீரமாமுனிவர் தமிழ் முனிவர்களுள் ஒருவராக விளங்குகின்றார்" என ரா.பி.சேதுபிள்ளை பாராட்டுகிறார். -இதில் விடுபட்ட வார்த்தைககளில் பொருந்துவது

[A] கதம்ப மாலையாக, முத்தாரமாக, பொன்நூலாக

[B] முத்தாரமாக, பொன்நூலாக, கதம்ப மாலையாக

[C] கதம்ப மாலையாக, பொன்நூலாக, முத்தாரமாக

[D] பொன்நூலாக, முத்தாரமாக, கதம்ப மாலையாக

41. "எவர்தம் பாடல்கள், உலகின் உண்மை நிலையை உணர்த்தி அழியாப் பேரின்பப் பெருவாழ்விற்கு நம்மை அழைத்து செல்லும்" என வர்ணிக்கப்படுகிறது

[A] அருணகிரிநாதர் [B] தாயுமானவர்

[C] குணங்குடி மஸ்தான் [D] திருமூலர்

42. 'பூமி அண்டத்தின் மையப்பகுதி எனவும் அஃது அசையாதது நிலையானது' எனவும் கூறியவர்?

[A] தாலமி [B] கோபர்நிகக

[C] கலீலியோ [D] நியூட்டன்

43. 'தாய்மையன் பிறனை'-பிரித்தெழுதுக

[A] தாய்மை+அன்பு+அனை

[B] தாய்மை+மயன்+பிறனை

[C] தாய்மை + அன்பின் + தனை

[D] தாய்மை+அன்பின்+பிறனை

44. அண்ணாமலையார் காவடி சிந்து கீழ்க்கண்ட எந்த ஊரின் இறைவனின் (முருகன்) சிறப்பை எளிய இனிய இசைப்பாடல்களால் போற்றிப் பாடப் பெற்றது

[A] திருப்பரங்குன்றம் [B] கழுகுமலை

[C] திருச்செந்தூர் [D] பழமுதிர்ச்சோலை

45. பின்வருவனவற்றில் விவேக சிந்தாமணியின் ஆசிரியர் யார்?

[A] புகழேந்திப்புலவர் [B] பூதஞ்சேந்தனார்

[C] கல்லாடனார்

[D] இவற்றில் எவருமில்லை

46. பொருத்துக

| | சொற்கள் | | இலக்கணகுறிப்பு |
|---|---|---|---|
| a) | கதை சொன்னான் | 1. | இரண்டாம் வேற்றுமைதொகை |
| b) | எனது புத்தகம் | 2. | ஆறாம் வேற்றுமை விரி |
| c) | சுடுசோறு | 3. | வினைத்தொகை |
| d) | கல்விகேள்வி | 4. | உம்மைத்தொகை |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| [A] | 3 | 2 | 4 | 1 |
| [B] | 3 | 4 | 2 | 1 |
| [C] | 4 | 3 | 2 | 1 |
| [D] | 1 | 2 | 3 | 4 |

47. தளர் நடையிட்டு வரும் குழந்தையின் சிறப்புகளை எடுத்துக் கூறுவது பிள்ளைத் தமிழின் எத்தனையாவது பருவம் ஆகும்

[A] மூன்றாம் பருவம் [B] நான்காம் பருவம்

[C] ஐந்தாம் பருவம் [D] ஆறாவது பருவம்

48. யாருடைய ஆட்சிக்காலத்தில் குறவஞ்சி நாடகம் தோன்றின.

[A] சோழ மன்னர்கள் [B] பாண்டிய மன்னர்கள்

[C] சேர மன்னர்கள் [D] நாயக்க மன்னர்கள்

49. "நாங்கள் கவிராசர்கள்" என்று செருக்குடன் கூறிய புலவர்களின் செருக்கை அடக்கியவர்

[A] காளமேகப்புலவர் [B] பாரதிதாசன்

[C] கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை

[D] ஒட்டக்கூத்தர்

50. சாளுக்கியர்களின் தலைநகரான கல்யாணபுரத்தின் மீது படையெடுத்து மும்முறை போரிட்டு வென்றவன்

[A] சோழன் இராசேந்திரன்

[B] சோழன் இராசாதிராசன்

[C] சோழன் இராசமகேந்திரன்

[D] சோழன் விசயாலயன்

51. "பாத்தனதாக் கொண்ட பிள்ளைப்பாண்டியன் வில்லிஒட்டக் கூத்தனிவர் கல்லாது கோட்டிகொளும் - சீத்தயரைக்" -என்ற தமிழ்விடுதூது பாடலில் 'சீத்தையர்' என்பவர் கீழ்க்கண்டவற்றில் எவர் யாவர்?

[A] மேலானவர் [B] போலிப்புலவர்

[C] அரசவைப் புலவர் [D] பிரதம அமைச்சர்

Note : The Information Provided here is only for Reference.It may vary the Original.

www.sarkariresults.io

52. கூற்றுகளை கவனி

| | |
|---|---|
| 1. வீட்டைக் கட்டினான் | -வேற்றுமைத் தொகா நிலைத் தொடர் |
| 2.மற்றொன்று | -இடைச் சொற்றொடர் |
| 3.வாழ்க வாழ்க | -அடுக்குத்தொடர் |
| 4.மாமுனிவர் | -பெயரெச்சத் தொடர் |
| 5.கண்டேன் இராமனை | -வினைமுற்றுத் தொடர் |

[A] 1, 2, 3 மற்றும் 4 சரி
[B] 2, 3, 4 மற்றும் 5 சரி
[C] 1, 2, 4 மற்றும் 5 சரி
[D] அனைத்தும் சரி

53. 1964-ஆம் கீழ்க்கண்ட எவருக்கு "தாமரைத்திரு" (பத்மஸ்ரீ) விருது வழங்கப்பட்டது
[A] கடலூர் அஞ்சலையம்மாள்
[B] ஆவுடையம்மாள்
[C] அம்புஜதம்மாள்
[D] அசலாம்பிகைஅம்மையார்

54. இறைவனையோ, நல்லாரையோ, பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அவரைக் மதலையாக கருதிப் பாடப்படும் சிற்றிலக்கியவகை எவ்வாறு அழைக்கப்படும்?
[A] கலம்பகம் [B] உலா
[C] பிள்ளைத்தமிழ் [D] பரணி

55. பாவணர் கோட்டம், அவரின் முழு உருவச்சிலை, அவர் பெயரில் நூலகம் ஆகியவை எங்கு நிறுவப்பட்டுள்ளது?
[A] திருவில்லிபுத்தூரில் [B] இராஜபாளையத்தில்
[C] திருநெல்வேலியில் [D] சங்கரன்கோவிலில்

56. "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" எனும் பாடல் திருவருட்பாவில் எந்த தலைப்பில் வரும்?
[A] ஜீவகாருண்யம்
[B] சமரச சன்மார்க்க விண்ணப்பம்
[C] பிள்ளை பெரு விண்ணப்பம்
[D] இறை விண்ணப்பம்

57. ஒவ்வோர் ஆண்டும் உலக வன விலங்கு நாள் கொண்டாடப்படுகிறது?
[A] அக்டோபர் இரண்டாம் நாள்
[B] அக்டோபர் மூன்றாம் நாள்
[C] அக்டோபர் நான்காம் நாள்
[D] அக்டோபர் ஐந்தாம் நாள்

58. பொருத்துக

| | சொற்கள் | | இலக்கணகுறிப்பு |
|---|---|---|---|
| a) | இயற்றுதல், ஏவுதல், | 1. | 6-ம் வேற்றுமை |
| b) | ஆக்கல், அழித்தல், அடைதல் | 2. | 5-ம் வேற்றுமை |
| c) | கொடை, பகை, நட்பு | 3. | 3-ம் வேற்றுமை |
| d) | கிழமை பொருளில் வருவது | 4. | 2-ம் வேற்றுமை |
| d) | நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது | 5 | 4-ம் வேற்றுமை |

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| [A] | 3 | 4 | 5 | 2 | 1 |
| [B] | 3 | 4 | 5 | 1 | 2 |
| [C] | 4 | 3 | 5 | 1 | 2 |
| [D] | 4 | 5 | 3 | 1 | 2 |

59. உலகம் உருண்டைய வடிவமானது" என்ற முதல் தமிழ்க் குரலுக்கு உரியவர்
[A] சேக்கிழார் [B] கணியன் பூங்குன்றன்
[C] திருவள்ளுவர் [D] பூதத்தாழ்வார்

60. கி.பி. 1632 இல் "உலகத்தின் முதன்மையான இரு முறைமைகளைப் பற்றிய உரையாடல்" என்ற நூலை எழுதியவர் யார்?
[A] கலீலியோ [B] ஐசக் நியூட்டன்
[C] கெப்ளர் [D] ஐன்ஸ்டீன்

61. தமிழ்நாட்டைச் சூழ்ந்துள்ள பிற பகுதிகளிலிருந்து தமிழில் வழங்கும் திசைச்சொற்கள் ........... ஆகும்.
[A] திசைச்சொல் [B] திரிசொல்
[C] இயற்சொல் [D] வடசொல்

62. பெயர்ச்சொல்லின் பொருளைச் செயப்படு பொருளாய் வேறுபடுத்துவது ............
[A] மூன்றாம் வேற்றுமை உருபு
[B] ஏழாம் வேற்றுமை உருபு
[C] நான்காம் வேற்றுமை உருபு
[D] இரண்டாம் வேற்றுமை உருபு

63. அம்புஜத்தம்மாள் யாருடைய எளிமையான தோற்றத்தினால் கவரப்பட்டு எளிமையாய் வாழந்தார்
[A] கமலா நேரு [B] சரோஜினி நாயுடு
[C] கஸ்தூரி பாய் [D] அஞ்சலையம்மாள்

Note : The Information Provided here is only for Reference.It may vary the Original.

www.sarkariresults.io

64. "நகை செய் தன்மையினம்பெழி இத்தாய் துகர்" எனத் தொடங்கும் பாடல் தேம்பாவணியில் உள்ள எந்தப் படலத்தை சார்ந்தது
[A] வாஞ்சைப் பத்து [B] மறுவப்பத்து
[C] மகவருள் [D] திருவருள்

65. திருமந்திரம் சைவத்திருமுறைகளில் எத்தனையாவது திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது?
[A] எட்டாம் திருமுறை [B] பத்தாம் திருமுறை
[C] பன்னிரெண்டாம் திருமுறை
[D] பதினாறாம் திருமுறை

66. தம் நாடக அனுபவங்களை எல்லாம் நாடக மேடை நினைவுகள் என்னும் தலைப்பில் எழுதியவர் யார்?
[A] சங்கரதாஸ் சுவாமிகள் [B] பரிதிமாற்கலைஞர்
[C] பாவாணர் [D] பம்மல்சம்பந்தனார்

67. தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகளைக் கவிதை வடிவில் தந்தவர்?
[A] பாரதியார் [B] வாணிதாசன்
[C] பாரதிதாசன் [D] கண்ணதாசன்

68. இந்தியப் சீனப் போரினைப் போர் நடைபெறும் இடத்திற்குச் சென்று செய்திகளைத் திரட்டிய பத்திரிகை எது?
[A] இண்டியன் எக்ஸ்பிரஸ்
[B]டைம்ஸ்ஆ:ப்இந்தியா
[C] இலண்டன் டைம்ஸ் [D] அமெரிக்கன் டைம்ஸ்

69. பின்வருவனவற்றில் எவர் ஆத்திச்சூடி வெண்பாவை எழுதியர் ஆவார்?
[A] ஔவையார் [B] பாரதியார்
[C] தமிழண்ணல் [D] அசலாம்பிகையார்

70. வினைமுற்றையோ பெயர்ச்சொல்லையோ வினைச்சொல்லினையோ பயனிலையாகக் கொண்டு முடிவது ........
[A] முதல் வேற்றுமை [B] மூன்றாம் வேற்றுமை
[C] நான்காம் வேற்றுமை
[D] இரண்டாம் வேற்றுமை

71. கீழ்க்கண்டவற்றுள் இலக்கணப் போலியைக் கண்டறிக
[A] நகர்ப்புறம் [B] கால்வாய்
[C] வாய்க்கால் [D] கொம்புநுனி

72. கி.மு3-ம்நூற்றாண்டு காலகட்டத்தை சேர்ந்த தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு உலோகங்களினால்செய்யப்பட்ட காசுகள் எங்கு கண்டறிப்பபட்டுள்ளன
[A] திண்டுக்கல், கரூர், மதுரை
[B] திருவாரூர், கரூர், மதுரை
[C] தருமபுரி, கரூர், மதுரை
[D] திருநெல்வேலி, கரூர், மதுரை

73. குற்றியலுகரம், முற்றியலுகரம், குற்றியலுகரம் ஆகியவற்றின் மாத்திரைகள் முறையே
[A] அரை, அரை, அரை [B] அரை, ஒன்று, அரை
[C] ஒன்று, ஒன்று, அரை [D] அரை, அரை, ஒன்று

74. கீழ்க்கண்டவற்றில் சலவரைச் சாரா என்றவர்?
[A] புல்லங்காடனார் [B] பூதஞ்சேந்தனார்
[C] பொய்கையார் [D] கண்ணன்சேந்தனார்

75. "எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும் பண்புடைமை என்னும் வழக்கு"-என்ற குறளில் 'வழக்கு' என்பது
[A] நேர்மை [B] நற்செயல்
[C] நன்னெறி [D] உயர்ந்த

76. கள்ளைச் "சொல் விளம்பி" என்று கூறுவது
[A] இலக்கணப்போலி [B] மங்கலவழக்கு
[C] குழுஉக்குறி [D] இடக்ரடக்கல்

77. ஒரு ஏக்கர் பரப்பளவில் வளர்ந்துள்ள மரங்கள் எத்தனை பேர்களுக்கு தேவையான உயிர்காற்றைக் கிடைக்கச் செய்கின்றன
[A] பன்னிரெண்டு [B] பதினான்கு
[C] பதினாறு [D] பதினெட்டு

78. பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டுச் செய்திகளை அறியும் முறை
[A] நேர்காணல் [B] கருத்துக்கேட்பு
[C] கூறெடுப்புஆய்வு [D] கள ஆய்வு

79. "புகழெனின் உயிரும் கொடுக்கவர் பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்" –இப்பாடல் இடம் பெற்ற நூல்
[A] அகநானூறு [B] புறநானூறு
[C] நாலடிநானூறு [D] குறுந்தொகை

80. "ஆடரவம்" என்பதனைப் பிரித்தெழுதுக
[A] ஆடு+ஆவம் [B] ஆடர்+ரவம்
[C] ஆடு+அரவம் [D] ஆடர்+அவம்

Note : The Information Provided here is only for Reference.It may vary the Original.

www.sarkariresults.io

81. மல்லல் மறுகில் மடநா(கு) உடனாகச்
செல்லும் மழவிடைபோல் செம்மாந்து –
மெல்லியலாள்-இதில் 'மறுகு' என்பது
[A] அரசன் [B] நாணம்
[C] அரசவீதி [D] பெருமிதம்

82. மதுரையில் ஔவையார் நாடகம் அரங்கேறிய ஆண்டு எது?
[A] 1932 [B] 1942 [C] 1952 [D] 1962

83. "இராமனுக்கு தம்பி இலக்குவன்"- இதில் உள்ள வேற்றுமை உருபு .......... பொருளில் வந்துள்ளது
[A] நட்பு [B] முறை [C] விளி [D] வழி

84. எந்நிலத்தின் பெருமை கருதியே வேந்தனை முதன்மைபடுத்தினர் தமிழர்கள்
[A] குறிஞ்சி [B] முல்லை
[C] மருதம் [D] நெய்தல்

85. மொழிநடைக்கு ஏற்ற சொல்லை கண்டறிக
[A] யானைக்குட்டி [B] தென்னம்பிஞ்சு
[C] கமுகந்தட்டை [D] நெற்றாள்

86. "கண் இமைத்த லாலடிகள் காசினியில்
தோய்தலால் வண்ணமலர் மாலை வாடுதல்"-
இப்பாடல் உணர்த்தும் நிகழ்வு எதைச் சுட்டுகிறது
[A] இன்பம் துய்த்தல் [B] ஐயம் தீர்த்தல்
[C] துன்பம் துய்த்தல் [D] உவகை தீர்த்தல்

87. "குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை" எனக் கூறும் நூல் எது?
[A] நல்வழி [B] மூதுரை
[C] ஆத்திச்சூடி [D] கொன்றை வேந்தன்

88. சீர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்த அமைவது
[A] சீர் [B] தளை
[C] அடி [D] தொடை

89. சுரதாவை உவமைக் கவிஞர் என்று முதன் முதலாக புகழ்ந்தவர் யார்?
[A] ஜெகசிற்பியன் [B] புதுமைபித்தன்
[C] சிற்பி [D] கு.ப.இராசகோபாலன்

90. "நகை செய்தன்மையி னம்பெழீ இத் தாய்துகள்
பகை செய் நெஞ்சமும்"- இப்பாடல் வரிகள் எந்த நூலில் உள்ளது?
[A] நளவெண்பா [B] திருவள்ளுவமாலை
[C] பாரதத்தாய் [D] தேம்பாவணி

91. கற்பவை கற்கும்படி வள்ளுவர் சொன்னபடி கற்கத்தான் வேண்டும் என்று கூறியவர்?
[A] பாரதியார் [B] பாரதிதாசன்
[C] ஔவையார் [D] கம்பர்

92. ஊன்பெற்ற பகழியினால் அழிந்தும் வீழ்ந்தும் உணர்வுடன்நின் திருநாமம் உரைக்கப் பெற்றேன்.
- இடம் பெற்ற நூல்
[A] பாரதத்தாய் [B] வில்லிபாரதம்
[C] கம்பராமாயணம் [D] நளவெண்பா

93. அறிவுள் அறிவை அறியும் அவரும் அறிய அரிய பிரமமே என்று கூறியவர் யார்?
[A] திருமூலர் [B] குமரகுருபரர்
[C] வள்ளலார் [D] அப்பர்

94. திருவருட்பாவில் இடம் பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை
[A] 5801 [B] 5805 [C] 5810 [D] 5818

95. நளவெண்பாவில் அமைந்துள்ள வெண்பாக்களின் எண்ணிக்கை
[A] 430 [B] 431 [C] 432 [D] 433

96. 'வெற்றிலை நட்டான்' இத்தொடரில் அமைந்துள்ள ஆகுபெயர்
[A] தொழிலாகு பெயர் [B] சினையாகு பெயர்
[C] இடவாகு பெயர் [D] பண்பாகு பெயர்

97. சென்னை எழும்பூரில் அருங்காட்சியகம் தொடங்கப்பட்ட ஆண்டு எது?
[A] 1841 [B] 1851 [C] 1861 [D] 1871

98. கீழ்க்கண்டவற்றில் எது கணினி உருவாக முதல் படியாக இருந்தது?
[A] கணிப்பான் [B] ஹார்வர்டு மார்க்-1
[C] மணிச்சட்டம்
[D] ஸ்டான்போர்டு பிளாக்-1

99. 'ஈரிருவர்'-பிரித்தெழுதுக
[A] ஈர்+இருவர் [B] இரு+இருவர்
[C] ஈரிர்+உவர் [D] இருமை+இருவர்

100. வரும் வண்டி- இதில் வரும் சொல்லின் மாத்திரை அளவு என்ன?
[A] 2 ½ [B] 2 ¼ [C] 3 [D] 2 ¾

Note : The Information Provided here is only for Reference.It may vary the Original.

www.sarkariresults.io

## MOCK TEST - 7 (8TH STD – TAMIL - ANSWER KEY)

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 11 | C | 21 | B | 31 | B | 41 | C | 51 | B | 61 | A | 71 | C | 81 | C | 91 | B |
| 2 | A | 12 | C | 22 | B | 32 | D | 42 | A | 52 | D | 62 | D | 72 | C | 82 | B | 92 | B |
| 3 | D | 13 | B | 23 | C | 33 | C | 43 | C | 53 | C | 63 | C | 73 | B | 83 | B | 93 | B |
| 4 | C | 14 | D | 24 | D | 34 | C | 44 | B | 54 | C | 64 | C | 74 | B | 84 | C | 94 | D |
| 5 | A | 15 | D | 25 | B | 35 | B | 45 | D | 55 | B | 65 | B | 75 | C | 85 | D | 95 | A |
| 6 | D | 16 | C | 26 | D | 36 | C | 46 | D | 56 | C | 66 | D | 76 | C | 86 | B | 96 | B |
| 7 | A | 17 | C | 27 | D | 37 | D | 47 | D | 57 | C | 67 | C | 77 | D | 87 | D | 97 | B |
| 8 | C | 18 | C | 28 | B | 38 | B | 48 | D | 58 | B | 68 | C | 78 | C | 88 | B | 98 | C |
| 9 | C | 19 | D | 29 | A | 39 | C | 49 | A | 59 | C | 69 | D | 79 | B | 89 | A | 99 | B |
| 10 | B | 20 | B | 30 | A | 40 | C | 50 | B | 60 | A | 70 | A | 80 | C | 90 | D | 100 | B |

Note : The Information Provided here is only for Reference.It may vary the Original.